1982 பிப்ரவரி 2]

அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத்திலே சொன்னார்கள். அந்தக் கோரிக்கை என்ன ஆயிற்று என்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கை இன்னும் மத்திய அரசினுடைய காதிலே விழாமல்தான் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் இயற்கையாக உண்டானதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மற்ற கனி வர்க்கங்கள் எல்லாம் ஒட்டு முறையிலே பயிர் செய்யப்படுகின்றது. அதுபோன்று இந்த மரத்தினையும் ஒட்டாக வைத்து வளர்ப்பதற்கு ஏதாவது பண்ணைகள் மூலம் முயற்சி செய்யப்பட்டதா? செய்யப்படாமல் இருந்தால் இனியாவது செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சந்தனத் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட கேள்வி நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே விவசாயம் சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்காதீர்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மத்திய அரசின் காதிலே விழவில்லை என்று கூறினார்கள். விழும்படியாக நமது மாநில அரசு ஏதாவது ஏற்பாட்டினைச் செய்தார்களா? அப்படி ஏதாவது ஏற்பாடுகளைச் செய்திருந்தால் அது சம்பந்தப்பட்ட பேப்பரை இங்கே வைப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டு காலமாகச் சொல்லி வருகிறோம். டெல்லியிலே நடைபெற்ற மாநாடுகளிலே கூட அமைச்சர்களை நேரிலே சந்தித்து சொல்லி இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதற்குப் பிறகும் என்ன முயற்சிகளை மேற்கொண்டால் அவர்களுடைய காதிலே விழும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்தான் தெரிவிக்க வேண்டும்.

வள்ளுவர் கோட்டம் மூலம் கிடைத்த வருமானம்.

*வினா எண் 6—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு வருமானம் வந்துள்ளது?

(ஆ) அதை மேம்படுத்தும் எண்ணம் உண்டா?

[1982 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (அ) சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் கிடைத்துள்ள வருமானத்தின் விபரம் :—

1979–80 .. ரூபாய் 3,59,121.50

1980–81 .. ரூபாய் 3,30,223.75

(ஆ) வள்ளுவர் கோட்டத்தில் கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள விரிசல்கள், ஒலி அமைப்புக்கள் போன்ற குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பின்புறத்தில் ஒரு அங்காடிக் கட்டிடம், ஒரு சிறிய அரங்கம் முதலியவற்றைக் கட்டுதல் போன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலவற்றை இங்கே அறிவித்தார்கள். வள்ளுவர் கோட்டத்தினைப் பார்க்க வருகின்றவர்கள் நம்முடைய மாநிலத்து மக்கள் மட்டுமல்லாமல் வெளி மாநிலத்து மக்களும் பார்க்க வருகின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. ஆனால் சுற்றுப்புறம் கூட சரியாகப் பராமரிக்கப்படாமல் குப்பை மேட்டுக்கிடையிலே இருக்கின்ற கோட்டமாக அது காட்சியளிக்கின்றது. அதை நல்ல நிலைமையிலே பராமரிக்கவும் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுப்பார்களா? கார்டன் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? அங்காடி என்று சொல்வதை எல்லாம் கைவிட்டுவிட்டு பார்க் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறம் சரியாக இல்லாத இடத்திலே கொண்டு போய் வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி விட்டார்கள். அதனால் சுற்றுப்புறத்தை சரி செய்ய மிகுந்த சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி மிகப் பெரிய பள்ளங்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளங்களை நிரப்பிக் கொண்டிருக்கும் வேலையில் தற்போது ஈடுபட்டிருக்கிறோம். அதனால்தான் சுற்றி குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது. அவைகளை சமப்படுத்திய பிறகுதான் அழகுபடுத்தும் வேலைகள் செய்ய வேண்டும். அதன் அருகாமையிலும் காலி இடங்கள் கிடையாது. ஆகையினால் சுற்றுப் புறத்தை முதலில் சமப்படுத்தும் முயற்சியோடு, வேறு கட்டிடங்கள் அங்கே வந்து விடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

குப்பைகளைக் கொட்டி நிரம்பிய இடங்களில் வேறு பல துறைகளைச் சேர்ந்தவர்கள், அங்கே தாங்கள் கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி கேட்கிறார்கள். அங்கே யாரும் கட்டிடம்

1982 பிப்ரவரி 2]

கட்டிக் கொள்ள முயல வேண்டாம் என்று மற்ற துறைகளுக்கும் தெரிவித்து இருக்கிறோம். வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி நல்ல பூங்காவாக அமைக்க வேண்டும், அழகுபடுத்த வேண்டும், அப்படிச் செய்தால் மிக நன்றாக இருக்கும். வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கும், மற்ற சுற்றுலாப் பயணிகளுக்கும் பார்ப்பதற்கு அப்போது மிக நன்றாக இருக்கும் என்ற வகையில் ஒரு திட்டத்தை தீட்டி தர வேண்டும் என்று பொதுப் பணித் துறையிடம் கேட்டிருக்கிறோம். அவர்களும் விரைவில் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

அது தவிர, அங்காடிக்கான கட்டிடம் கட்டவிருப்பதாக நான் சொல்வது வள்ளுவர் கோட்டத்தின் பின் பக்கத்திலே. அதன் முன்னாலே இருக்கும் இடம் மிகக் குறுகலானது. அதிலே பல கடைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்ற திட்டத்தின் கீழ், பின்னாடி அங்காடிக்கான கட்டிடங்களைக் கட்டினால், வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கும் அவைகள் வசதியாக இருக்கும் என்ற அடிப்படையில், வள்ளுவர் கோட்டத்தின் பின்னாலே குடிசைகள் கட்டிக் கொண்டிருந்தவர்களை காலி பண்ணியிருக்கிறோம். அந்த இடத்திலேதான் அங்காடிகள் கட்ட வேண்டும் என்கிற திட்டம் இருக்கிறது.

திரு ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் வருடம் ஜுன் மாதத்தில் அங்கே வள்ளுவர் கோட்டத்தில் கட்சியின் சார்பாக ஒரு வார காலம் விழா எடுப்பதற்கான ஒத்திகை நடைபெற்றதற்கு......(குறுக்கீடு-மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தில் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை எழுப்ப வேண்டாம். மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள்.

திரு ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, அதற்கான வாடகை வசூலிக்கப் பெற்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்கிற கேள்விக்கு என்னிடத்திலே தகவல் இல்லை.

நகர்ப்புற கழிவு நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

*வினா எண் 7—திரு இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகர்ப்புற கழிவுநீர் விவசாயத்திற்கு நேர்முகமாக உபயோகிக்க ஆராயப்பட்டதா ?

(ஆ) இதை உபயோகிப்பதனால் எவ்வளவு ஏக்கர் பயிர் செய்ய நீர் வசதி ஏற்படும் ?